சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்,
நாள்.27.03.2023

**<u>சாதாரணக் கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் பங்குனி மாதம் 16-ஆம் நாள் மார்ச் திங்கள், நாள்.30.03.2023 வியாழக் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் தெரிவித்துள்கொள்கிறேன்.

(ஒப்பம்) திருமதி.ரா.அய்யம்மாள்
நகர்மன்றத் தலைவர்,
சின்னமனூர் நகராட்சி.

# கூட்டப்பொருள்

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி/2023 ஆம் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | **மன்றம் பதிவு செய்யலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 397, நாள்.30.03.2023 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண் .2**

சின்னமனூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி/2023 ஆம் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | **மன்றம் பதிவு செய்யலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 398, நாள்.30.03.2023 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதை செய்யும் கூடத்திற்கு (Slaughter House) 2023-2024 முதல் 2027-2028 வரை உள்ள ஆண்டிற்கான புதுப்பித்தல் (Renewal) மேற்கொள்ளும் பொருட்டு புதுப்பித்தல் கட்டணம் ரூ.44000/-ஐ செலுத்துமாறு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அவர்களின் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்கண்ட தொகையினை வங்கி வரைவோலை எடுத்து தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனிக்கு அனுப்ப மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | **1.மன்றம் அனுமதிக்கலாம்**<br>**2.பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி எதிர்வரும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.(ந.க.எண்.1112/2009/எச்1)** |

| | |
|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 399, நாள்.30.03.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள் மற்றும் நிலவேம்பு கசாயம் தூள் வாங்க 03.03.2023 கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எ ண் | விவரம் | ஸ்ரீ தாய்மூகாம்பிகா எக்ஸ்போட் தொகை (1 எண்ணம் GST உட்பட) | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங்தொகை (1 எண்ணம் GST உட்பட) |
|---|---|---|---|
| 1 | லெமன் கிராஸ் ஆயில் | 2997.20 | 3068 |
| 2 | கருப்பு பினாயில் | 70.80 | 76.77 |
| 3 | கையுறைகள் | 151.04 | 177 |
| 4 | நிலவேம்பு கசாயத்தூள் | 1785 | 1890 |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | **1.மேற்படி வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீதாய் மூகாம்பிகா எக்ஸ்போட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.4793/2022/எச்1)** |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 400, நாள்.30.03.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பகுதியில் சமுதாயக் கழிப்பறைகள் 19 எண்ணிக்கையும், பொதுக்கழிப்பிடங்கள் 5 எண்ணிக்கையும் பயன்பாட்டில் உள்ளது. எனவே, மேற்கண்ட சமுதாயக்கழிப்பறைகள் மற்றும் பொதுக்கழிப்பறைகளில் QR Code பொருத்துவதற்கு **10.03.2023**ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | விவரம் | FUTURA DIGITAL COMMUNICATION (1 எண்ணம் GST உட்பட) | S.R.DIGITAL PRINT (1 எண்ணம் GST உட்பட) | ANNAI OFFSET & PRINT (1 எண்ணம் GST உட்பட) |
|---|---|---|---|---|
| 1 | சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுக்கழிப்பறைகள் | 2200 | 2300 | 2350 |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மேற்படி வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளிகள் கொடுத்துள்ள FUTURA DIGITAL COMMUNICATION., KODAIKANAL என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 401, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான சங்கிலியார் திடலில் உள்ள கட்டணக் கழிப்பறைக்கு**17.03.2023** ஆம் நாள் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி கோரி யாரும் பொறுப்புத்தொகை செலுத்தவில்லை. ஏலம் கோரி கீழ்க்கண்ட விவரப்படி இரு நபர்கள் பொறுப்புத் தொகை செலுத்தி ஏலம் கோரியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலம் கோரியர் பெயர் | ஏலம் கோரிய தொகை |
|---|---|---|
| 1 | எம்.பால்பாண்டி,உசிலம்பட்டி | ரூ.405200/- |
| 2 | எம்.முனியப்பன்,சின்னமனூர் | ரூ.405100/- |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | 1. கடந்த 19.01.2023, 15.02.2023 மற்றும் 02.03.2023 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கு யாரும் பொறுப்புத்தொகை செலுத்தப்படவில்லை. இந்நிலையில் 17.03.2023 இல் நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு.எம்.பால்பாண்டி என்பவர் ரூ.405200/-ற்கு உயர்ந்தபட்ச ஏலம் கோரியுள்ளார். அன்னாரின் ஏலக்கேள்வியானது கடந்த ஆண்டு ஏலத் தொகை ரூ.403515/- ஐ விட ரூ.1685/- கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரி ரூ.384605/- விட ரூ.20595/- கூடுதலாகவும் உள்ளதை ஏற்று விதிகளுக்குட்பட்டு அன்னாருக்கு உரிமம் வழங்க மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 402, நாள்.30.03.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தின் வடக்கு பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமாக காலியிடத்தின் இருசக்கர வாகனம் நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்க வருட வாடகை அடிப்படையில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். 392, நாள்.28.02.2023 மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட விவரப்படியான நிபந்தனைகளுடன் கட்டணம் மற்றும் பொறுப்புத்தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஏலப்பொறுப்புத் தொகையாக ரூ.100000/-மும் கூடுதல் பொறுப்புத்தொகையான ரூ.100000/-மும் செலுத்த நிர்ணயிக்கலாம்.
2. உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் நபர்களுக்கு உரிமம் வழங்கும்பொழுது காலியிடத்தில் எளிதில் தீப்பிடித்துக்கொள்ளாத கொட்டகையினை அவரவர் சொந்தப் பொறுப்பிலேயே அமைத்துக்கொள்ள வேண்டும்.
3. இருசக்கர வாகனம் நிறுத்திக் கொள்வதற்கு 12 மணி நேரத்திற்கு ரூ.10/- வீதமும் 24 மணி நேரத்திற்கு ரூ.20/-வீதமும் வசூலித்துக்கொள்ள கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

<table>
<tr><td>அலுவலகக் குறிப்பு :-</td><td>1.மேற்கண்டவாறு கட்டணம் மற்றும் நிபந்தனைகளின்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td></tr>
<tr><td>நகர்மன்ற தீர்மான எண் :</td><td>403, நாள்.30.03.2023</td></tr>
<tr><td>தீர்மானம் :</td><td>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td colspan="2">*******</td></tr>
<tr><td colspan="2">பொருள் எண்.8<br>சின்னமனூர் நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதிகளின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு / செலவு அறிக்கை (Revised Budget) மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு / செலவு அறிக்கை (Edtimated Budget) மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>அலுவலகக் குறிப்பு :-</td><td>1.மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1662/2019/பி1)</td></tr>
<tr><td>நகர்மன்ற தீர்மான எண் :</td><td>404, நாள்.30.03.2023</td></tr>
<tr><td>தீர்மானம் :</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td colspan="2">*******</td></tr>
<tr><td colspan="2">பொருள் எண்.9<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை தற்போது 38462 உள்ள நிலையில் வாக்காளர்களின் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும்படி அரசு உத்திரவிட்டுள்ளதால், மேற்படி வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி (ERO and GARUDA SOFTWARE) ஆகிய கணினி மென்பொருள் மூலம் தனியார் கம்ப்யூட்டர் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மேற்படி தேர்தல் பணிக்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
<tr><td>அலுவலகக் குறிப்பு :-</td><td>1. மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3780/2021/அ4 )</td></tr>
<tr><td>நகர்மன்ற தீர்மான எண் :</td><td>405, நாள்.30.03.2023</td></tr>
<tr><td>தீர்மானம் :</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஜெட்ராடிங் வாகனம் TN60S2193-க்கு தகுதி சான்றிதழை புதுப்பிக்கும் பொருட்டு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.360, நாள்.28.02.2023-இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 20.03.2023ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | M/s.A.S.R.Body Works, Madurai | ரூ.244310.74/- (Including GST 18%) |
| 2. | M/s.Sadhguru Motors, Madurai | ரூ.249833.14/- (Including GST 18%) |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1இல் காணும் M/s.A.S.R.Body Works, Madurai என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6437/2014/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 406, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண்.TN60z5198க்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.60000/-க்கு (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம் (ந.க.எண்.4458/2014/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 407, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் பிரதான குழாய்கள், பகிர்மானக் குழாய்களில் பணிபுரிய போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.362, நாள்.28.02.2023-இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 20.03.2023ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | - 0.15% மதிப்பீட்டு விலையைவிட குறைவு |
| 2. | திருமதி.எஸ்.சுப்புலெட்சுமி, சீலையம்பட்டி | -0.59% மதிப்பீட்டு விலையைவிட அதிகம் |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.9024/2022/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 408, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்.13**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்படும் மினி டிராக்டர் வாகனம் TN60G0742-ன் பேட்டரி பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் வாகனம் இயக்கப்படாமல் உள்ளது. மேற்படி வாகனத்திற்கு புதிதாக பேட்டரி வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.6000/-க்கு (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) நகர்மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்திற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0607/2023/எச் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 409, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் லாரி வாகனம் TN603761-க்கு தகுதி சான்றிதழை புதுப்பிக்கும்பொருட்டு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.361, நாள்.28.02.2023-இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 20.03.2023-ம் தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.85,000/- |
| 2. | நேஷனல் பாடி பில்டிங் லேபர் ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.88,500/- |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-இல் காணும் சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.0324/2014/இ2) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 410, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சியில் வாசகசாலை உபயோகத்திற்காக தினசரி நாளிதழ்கள் வாங்கப்படுகிறது. அவ்வாறு 01.01.2020 முதல் வாங்கப்பட்ட பழைய தினசரி நாளிதழ்களை ஏலம் கோரும் நடவடிக்கைக்காக நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. ஏலம் கோரும் நடவடிக்கைகளை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.(1653/2020/பி2) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 411, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் 2.O-ன் கீழ் 27 வார்டுகளின் எல்லைகள், நகர எல்லை, சமுதாய கழிப்பறைகள், பொது கழிப்பறைகள், நுண்ணுயிர் செயலாக்க மையம் (MCC), வளமீட்பு மையம் (RRC) போன்றவற்றினை GIS Mapping செய்வதற்கு மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க மேற்படி பணியினை செய்ய ஆகும் உத்தேச தொகை ரூ.19,000/- (ரூபாய் பத்தொன்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | **1.மன்றம் அனுமதிக்கலாம்**<br>**2.பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.(ந.க.எண்.1147/2023/எச்1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 412, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.17**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண்.TN60AW6788 என்ற TATA ACE வாகனத்திற்கு ஜாய்ன்ட் மற்றும் ஜாய்ண்ட் ஸ்டார்ட்டர் பழுதடைந்து வாகனம் இயக்கஇயலாத சூழ்நிலையில் உள்ளதால், மேற்படி பழுதினை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/-க்கு (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) நகர்மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** : - | **1.மன்றம் அனுமதிக்கலாம்**<br>**2.பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்திற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0608/2023/எச்1)** |

| | |
|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 413, நாள்.30.03.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.18**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதானக் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள், பாதாள சாக்கடை மெயின் லைன் அடைப்பு மற்றும் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்யும் பணிகளை நகராட்சிக்குச் சொந்தமான ஜே.சி.பி.இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஜே.சி.பி இயந்திரத்தின் முன் மற்றும் பின்பக்கம் உள்ள பக்கெட்டுகளில் உள்ள பற்கள் மிக எளிதில் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, மேற்படி பற்களில் இரயில்வே பிளேட் பொருத்தி பக்கெட் பராமரிப்பு வேலை மேற்கொள்ளவும், ஜே.சி.பி இயந்திரத்திற்கு தேவையான டூல்ஸ் பாக்ஸ் வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.68000/- (ரூபாய் அறுபத்து எட்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு :-** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 414, நாள்.30.03.2023 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பெண்கள் கழிப்பிடங்களில் நாப்கின் எரிப்பான் (Incinerator) 20 எண்ணம் பொருத்தும் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.393, நாள்.28.02.2023-இன்படி அனுமதி பெறப்பட்டு 23.03.2023ம் தேதியன்று கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | வருணா என்டர்பிரைசஸ், தேனி | 0.08% மதிப்பீட்டு விலையை விட குறைவு |
| 2. | பாலாஜி டிரேடர்ஸ், தேனி | 0.15% மதிப்பீட்டு விலையை விட குறைவு |

| அலுவலகக் குறிப்பு :- | 1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1இல்காணும் M/s.வருணா என்டர்பிரைசஸ், தேனி அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.0906/2023/இ1) |
|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 415, நாள்.30.03.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.20**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டி வளாகத்தின் முன்புறம் தடுப்பு வேலை (Fencing) அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.394, நாள்.28.02.2023-இன்படி அனுமதி பெறப்பட்டு 23.03.2023ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | வருணா என்டர்பிரைசஸ், தேனி | 0.10% மதிப்பீட்டு விலையை விட குறைவு |
| 2. | பாலாஜி டிரேடர்ஸ், தேனி | 0.17% மதிப்பீட்டு விலையை விட குறைவு |

| **அலுவலகக் குறிப்பு :** - | 1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1இல்காணும் M/s.வருணா என்டர்பிரைசஸ், தேனி அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.0905/2023/இ1) |
|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண் :** | 416, நாள்.30.03.2023 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.21**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 07.03.2023ம் தேதிய ந.க.11919/2022/சிஎப்சி1 எண்ணிட்ட கடிதம் மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 21.03.2023ம் தேதிய ந.க.3096/2022/பி2 எண்ணிட்ட செயல்முறை உத்திரவின்படி, இந்நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (United Grant) 2022-

| | |
|---|---|
| 2023-இன் கீழ் தொகை ரூ.60.00 இலட்சம் (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** :- | மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண். 1034/2023/இ1) |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 417, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | பதிவு செய்யப்பட்டது. |
| ******* | |

**பொருள் எண்.22**

அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை (சந4-1) துறை, நாள்.27.07.2022-இன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளில், விதி எண்.110-இன் கீழ், வெளியிடப்பட்ட அறிவிப்பு மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10.03.2023ம் தேதிய ந.க.17404/2022/எம்1 எண்ணிட்ட கடிதத்தின்படி, அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வண்டிப்பேட்டை அருகில் ஒருங்கிணைந்த சமையல் கூடம் கட்டும் பணி ரூ.32.50 இலட்சத்தில் (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3.நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 418, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |

**பொருள் எண்.23**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை (1 + 9) மொத்தம் 10 இயங்கி வருகின்றன. மேற்படி பள்ளிகளில் கழிவறைகளை பராமரிக்கும்பொருட்டு அரசாணை (நிலை) 77 பள்ளிக்கல்வி (பக4C1)த்துறை, நாள்.13.04.2015 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 26.10.2017ம் நாளிட்ட ந.க.32050/2016/ஜே2 எண் கடிதத்தில் ஆணைகள் மற்றும் அறிவுரைகள் பிறப்பிக்கப்பட்டன. அதனடிப்படையில் கழிவறைகள் சுத்தமாக பராமரிக்கும் பணிக்கு திரு.R.பரமானந்தன் ஒப்பந்ததாரருக்கு 31.03.2023 வரை ஒப்பந்தகாலம் முடிவடைவதால் 01.04.2023 முதல் 30.04.2023 வரை ஒரு மாதம் அதே ஒப்பந்த விகிதத்தில் தொடர்ந்து பணி செய்ய உத்திரவிடலாம்.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத் தொகையை 2023-2024ம் ஆண்டிற்கான கல்வி நிதியிலிருந்து செலவி செய்யலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 419, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.24**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை தினத்தந்தி தினசரி நாள்தழில் 01.03.2023 அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.21840/- (ரூபாய் இருபத்தி ஒரு ஆயிரத்து எண்ணூற்று நாற்பது மட்டும்) M/s The Daily Thanthi, Dindugal அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 420, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.25**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை Evening TamilNadu தினசரி நாள்தழில் 10.03.2023 அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.14490/- (ரூபாய் பதினான்காயிரத்து நானூற்று தொன்னூறு மட்டும்) M/s Evening TamilNadu, Chennai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 421, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.26**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.24, அண்ணாமலை நகரில் மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்த மழைநீர் வடிகாலினை சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு** :- | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 422, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

| | |
|---|---|
| **பொருள் எண்.27**<br>இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.12, பூலான்தெருவில் மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சேதமடைந்த மழைநீர் வடிகாலினை சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ3.50 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு** : - | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை நிதிக்கேற்ப வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்** : | 423, நாள்.30.03.2023 |
| **தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |
| ******* | |

(ஒப்பம்) திருமதி.ரா.அய்யம்மாள்

நகர்மன்றத் தலைவர்

சின்னமனூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்

சின்னமனூர் நகராட்சி.